செய்தி வெளியீடு எண்: 341 நாள் : 14.07.2015

# பத்திரிக்கை செய்தி

தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட கன்னடப்பாளையத்தில் 4.55 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் கடந்த 06.07.2015 அன்று இரவு தீ பிடித்து எரிந்தது. மாண்புமிகு. தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, நகராட்சி நிர்வாகம் போர்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு தீயணைப்புதுறைக்கு சொந்தமான 5 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் 10 தனியார் டேங்கர் தண்ணீர் லாரிகள் மூலம் அருகில் உள்ள முல்லை நகர் ஏரியில் இருந்தும் மற்றும் தனியாருக்கு சொந்தமான 3 கிணறுகளில் இருந்தும் தண்ணீர் கொண்டு வந்து, 3 செயின் பொக்லைன் மற்றும் 2 மண்வாரி இயந்திரங்கள் மூலம் குப்பைகளை களைந்து எரியும் தீயியானது அனைக்கப்பட்டு, புகைவதும் 09.07.2015 அன்று மாலை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இப்பணியில் நகராட்சி பணியாளர்கள் 50 பேரும், தீயணைப்பு துறையின் 40 பணியாளர்களும் காவல்துறை பாதுகாப்புடன் இரவு பகலாக ஈடுபடுத்தப்பட்டு, தீயணைப்புப் பணி முடிக்கப்பட்டது.

மேலும் குப்பை கிடங்கின் அருகில் உள்ள குடியிருப்பு வாசிகளுக்கும், நகராட்சி பணியாளர்களுக்கும் தீயணைப்பு துறை பணியாளர்களுக்கும் ஒவ்வாமையினை தடுக்க நகராட்சி மூலம் சிறப்பு மருத்துவக்குழு அமைக்கப்பட்டு, தடுப்பூசி போடப்பட்டு, மருந்துகள் தெளிக்கப்பட்டும் சுகாதரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் குப்பை கிடங்கை சுற்றிலும் எதிர்காலத்தில் தீபிடிப்பதை தடுக்கவும், கண்காணிக்கவும் தெருவிளக்குகள், சாலை வசதி, கண்காணிப்பு CCTV கேமராக்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள் (Fire fighting) பொருத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அனைத்து நகராட்சி குப்பை கிடங்களுக்கும் கண்காணிப்பு கேமிராக்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள் பொருத்த நகராட்சி நிர்வாக இயக்குனரால் அறிவுரை வழங்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரைக்கேற்ப, இப்பகுதியினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை, சட்டம் மற்றும் சிறைச்சாலை துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு. கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.டி.கே.எம். சின்னையா, திருமிகு. பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே.என். ராமச்சந்திரன், நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.கோ. பிரகாஷ் இ.ஆ.ப. அவர்கள், தாம்பரம் நகர்மன்ற தலைவர் திரு.ம. கரிகாலன் மற்றும் செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் திருமதி. என்.எஸ். பிரேமா ஆகியோர் தீ மற்றும் புகை கட்டுப்படுத்தும் பணியை ஆய்வு செய்து தொடர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறித்தினார்கள்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**